**மாத்தறை மாநகர சபை - 2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

மாத்தறை மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவு 219 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, மாத்தறை மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு நடைமுறைகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பாதகமான அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மாநகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் (6)(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் (6)(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி இந்த அறிக்கையில் 1.6.1 பந்தியில் (ஐ),(ஒ),(ஓ) மற்றும் (ஔ) அவதானிப்புகள் தவிர முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ஏல விற்பனையின் மூலம் அப்புறப்படுத்தப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 2,933,103 தொகைக்கான நிலையான சொத்துக்களின் கிரயம் அறுதியாக இனங்காணாமல் முன்வந்து முன்செல்லல் அடிப்படையில் அப்புறப்படுத்தப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட சொத்துக்களின் பெறுமதியை அறுதியாக இனங்காண்பதற்காக நடைமுறை ஒன்று காணப்பட்டிருக்காததுடன் முன்வந்து முன்செல்லல் அடிப்படையில் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது ரூபா 56,500,000 இற்கான செலவுகளுக்கு உரிய சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறைநிரப்பு மதிப்பீட்டின் பெறுமதி திரண்ட நிதியத்திற்கு வரவு வைத்து ஏனைய வருமானங்கள் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் படி மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 56,500,000 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது நிதிச் செயலாற்றல் கூற்றில் மீளாய்வாண்டில் மிகையும் குறை நிரப்பு மதிப்பீட்டிற்குரிய மிகையும் வெவ்வேறாக காட்டப்பட்டுள்ளது என. | |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டு இறுதி அளவிலும் வழங்குனர்களுடன் உடன்படிக்கை மேற்கொண்டிருக்காத ரூபா 15,800,000 இற்கான கொள்வனவுகளுக்காக பலவின கடன்கொடுத்தோர்களின் கீழ் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. | பஸ் வண்டி ஒன்று மற்றும் ஜீப் வண்டி ஒன்று கொள்வனவுக்கு உரிய கூறுவிலைகள் அழைக்கப்பட்டு 2021 திசெம்பர் 17 திகதி கூறுவிலைகள் திறக்கப்பட்டும் கல் உருளை ஒன்று கொள்வனவு செய்தல் தொடர்பான 2021 நவம்பர் 25 திகதி வழங்குனருக்கு கட்டளை வழங்கப்பட்டிருத்தல் மற்றும் மின்பிறப்பாக்கி ஒன்று கொள்வனவு செய்யும் செய்முறையின் 75% தொகை மாத்திரம் 2021 ஆண்டு இறுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல், காரணமாக கடன்கொடுத்தோர் ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2017 ஆண்டின் போது முத்திரைக் கட்டண குறை ஒதுக்கம் ரூபா 22,700,303 தொகையும் 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் போது மிகை ஒதுக்கம் ரூபா 38,227,550 தொகையும் மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆண்டிற்காக குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,261,433.70 தொகை மற்றும் 2017 மற்றும் 2019 ஆண்டுகளுக்காக மிகையாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 18,757,026 தொகை மற்றும் ரூபா 13,394,884 தொகை தொடர்பாக மீளாய்வாண்டின் போது கணக்குகளின் மூலம் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டது என. | |
| (உ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 2021 உள்ளுராட்சி நிறுவனங்களை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 14,000,000 தொகை பெறுமதியான மாத்தறை பஸ் தரிப்பு நிலையத்தில் கழிவு நீர் மற்றும் கழிவுப் பொருட்களை மீள்சுழற்சி செயற்திட்டம் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்படாமையால் செயற்திட்டம் அடுத்த ஆண்டிற்காக தொடர்வேலையாக ஆக்கியிருக்காத போதிலும் பெற வேண்டிய கடன்பட்டோர் என ரூபா 14,730,703 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | இந்த வேலைக்காக மீளாய்வாண்டின் போது உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு 2021 திசெம்பர் 03 திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ள கடன்பட்டோர் ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டது என. | |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டின் போது சபையினால் அரச வங்கியொன்றில் பேணப்பட்டு வந்த நடைமுறைக் கணக்கொன்றிற்கு கிடைத்திருந்த முத்திரைக் கட்டணம் ரூபா 19,000,000 தொகைக்காக நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 திசெம்பர் மாத வங்கிக் கூற்று 2022 ஜனவரி மாதம் கிடைத்திருந்ததுடன் வங்கி கூற்றை பரிசோதனை செய்து சரி என உறுதிப்படுத்தும் வரை சீராக்கல் செய்யவில்லை என. | |
| (எ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் (இயந்திரப் பொறிகள் மற்றும் உபகரணங்கள்) மீதியாகிய ரூபா 1,261,530 இற்குரிய 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை கடன்வட்டி ஆகிய ரூபா 1,140,000 தொகை மற்றும் கடந்த மற்றும் மீளாய்வாண்டிற்கான வட்டியை கணித்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | கடன் தொகை தொடர்பாக தகவல் ஏதும் கண்டறிய முடியாது எனவும், நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,142,000 இற்கான வட்டி ஒன்று பதிவு செய்யப்பட்டு 2020 பெப்ரவரி 06 திகதி கடிதம் அனுப்பப்பட்டிருந்த போதிலும், அதன் பின்னர் இது வரை அது தொடர்பாக அறிவுறுத்தி இருக்கவில்லை எனவும் எதிர்காலத்தில் இது தொடர்பாக கலந்துரையாடி கொடுப்பனவு அலுவல்கள் மேற்கொள்ளப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | நகர சபை ஆணையாளர் உத்தியோகபூர்வ வாசஸ்தளம் நிர்மாணிக்கும் ஒப்பந்த வேலைக்காக ஒப்பந்ததாரருடன் ரூபா 12,923,273 தொகைக்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ரூபா 15,673,438 தொகைக்கான பொறியியல் மதிப்பீட்டு பெறுமதி மீது அடிப்படையாகக் கொண்டு கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் மிகை ரூபா 2,750,165 தொகை குறைவாகவும் கடன்கொடுத்தோர் மிகையாகவும் காட்டப்பட்டிருந்தது. | பொறியியல் மதிப்பீட்டு பெறுமதி மீது கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பஸ் தரிப்பு நிலைய வர்த்தக கட்டிடத் தொகுதியின் கடன் கணக்கில் காணப்பட்ட ரூபா 49,774,022 இற்கான மீதிக்காக வட்டி கணித்து மீளாய்வாண்டிலும் கணக்கீடு செய்திருக்கவில்லை. | கணக்குகளில் காணப்படுகின்ற சிக்கல் நிலைமைகளை தீர்த்தது இரு தரப்பினருடனும் இணக்கம் ஒன்றிற்கு வந்த பின்னர் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடன் வட்டி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | வர்த்தக தொடர்கட்டிடம் நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த தொகையில் 35 சதவீதம் எனப்படும் ரூபா 37,871,539 தொகை கடையறைகளை டென்டர் பண்ணி பெற்றிருந்த ஒரே தடவையில் பெறும் | இது தொடர்பாக கலந்துரையாடி எடுக்கப்படும் தீர்மானத்தின் படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என. | ஒரே முறையில் பெற வேண்டிய பணத்தில் இருந்து செலவிடப்பட்ட தொகையை செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணம் (Key Money) செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வண்டு இறுதியளவிலும் இந்தப் பணம் தீர்த்திருக்கப்பட்டிருக்காததுடன், மீளாய்வாண்டின் போதும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஓ) | முன்னைய ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 4,576,000 தொகை பெறுமதியான எரிபொருள் நிரப்புநிலைய செலவு மீளாய்வாண்டின் போதும் இயந்திர உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | சபையினால் கட்டிடங்கள் மற்றும் நிர்மாண வேலை கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்படாததுடன், ரூபா 950,000 இற்கான எரிபொருள் பம்பின் பெறுமதி 2022 ஆண்டின் நாட்குறிப்பு பதிவின் மூலம் இயந்திர உபகரணத்தின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட மூலதனச் செலவு இயந்திர உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஔ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய பங்களிப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகையின் கூட்டுத்தொகை ரூபா 47,949,392 தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ஏற்படுத்தியிருக்கவில்லை | உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்காக இது வரை கொடுப்பனவு செய்யப்பட்டிருக்காததுடன், குறிப்பிட்ட ஓய்வூதியம் பெறுவோர் உயிருடன் வாழ்கிறாரா என்ற தகவல்கள் பிரதேச செயலகத்தின் மூலம் பெற்றுக்கொண்டு ஓய்வூதிய திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது எனவும், அந்த தீர்மானம் கிடைக்கும் வரை கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்படவில்லை. | கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 கணக்கு விடயங்கள் தொடர்பான நிதிக்கூற்றுக்களின் படி பெறுமதி மற்றும் பதிவேடுகள்/ அட்டவணையின் படி பெறுமதியிடையே ரூபா 184,902,984 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நாளதுவரை ஆக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, விரிவான அட்டவணைகள் மற்றும் தனிப்பட்ட மீதிகளின் அட்டவணை ஆகிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 449,948,532 தொகைக்கான 10 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 142,443,317 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 91,331,461 தொகையாக இருந்தது.

### 2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

#### (அ) வீதவரி

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட 34121 வீதவரி அலகுகளில் 20821 வீத வரி அலகுகளுக்குரிய ரூபா 60,689,595 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டதுடன் அவற்றில் அரச நிறுவனங்களுக்குரிய 442 ஆதனங்களில் இருந்து ரூபா 7,067,688 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிலுவை வருமானம் அறவீடு செய்தல் தொடர்பாக கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய வேண்டும் |

#### (ஆ) களியாட்ட வரி

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 316,247 தொகை நிலுவையாக காணப்பட்டது. | நாட்டில் நிலவிய நிலைமையின் படி திரைப்பட சாலைகள் மூடப்பட்டிருந்தமையால் வருட ஆரம்பத்தில் நிலுவை மீதியை அறவீடு செய்வதற்கு முடியாமல் போனது எனவும் எனினும் ஆண்டிற்கான சிட்டையிடல் உரிய முறையில் அறவீடு செய்யப்பட்டது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய வேண்டும் |

#### (இ) கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்கு சொந்தமான 463 கடையறைகள் 106 கடை நிலத்துண்டுகள் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் 436 வாடகைதார்களிடம் இருந்து ரூபா 60,716,741 இற்கான நிலுவை வருமானம் காணப்பட்டதுடன், அந்த நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைகள் தொடர்பாக வாடகையாளர்களை அடிக்கடி அறிவுறுத்தி தவணைகளாக அறவீடு செய்யப்படுகின்றது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய வேண்டும் |

**(ஈ) தரை வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 ஒக்தோபர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்கு சொந்தமான ஆதனங்களை தரை வாடகை கொடுக்கப்பட்டிருந்த தரை வாடகைதாரர்கள் 283 பேரிடம் கூட்டுத்தொகை ரூபா 8,132,980 இற்கான தொகையொன்று சபைக்கு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | பதிவு செய்யப்பட்ட வாடகைதாரர்களிடம் நிலுவை வாடகை தொடர்பாக இணக்க சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது என. | நிலுவை வாடகை விரைவாக அறவீடு செய்ய வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

**செயலாற்றல்**

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாத்தறை மா நகர சபையினால் குப்பை போக்குவரத்துக்காக பயன்படுத்தப்பட்டிருந்த டிரக்டர் மற்றும் சாக்கடை பவுசர் வண்டிகளில் GPS முறைமை பொருத்துவதற்காக ஒரு தொலைபேசி நிறுவனத்திற்கு 2019 ஆண்டின் போது ரூபா 177,212 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 2019 ஜூலை முதல் 2020 செப்தெம்பர் மாதம் வரையான மாதாந்த பில்பத்திரத்திற்காக ரூபா 171,670 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் முறைமை ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருட காலம் கடந்திருந்த போதிலும் குப்பை முகாமைத்துவ அலுவல்களில் காணப்படும் பலவீனங்களை இனங்கண்டு அவற்றை சரி செய்து கொள்வதற்கு இந்த முறைமையை பயன்படுத்தியிருக்கவில்லை. | சேவை முறிவு மற்றும் அந்த சேவைகளை செயற்படுத்துவதில் தாமதம் ஏற்பட்ட காரணத்தினால் 2019 நவம்பர் மாதம் முதல் இந்த முறைமைக்குரிய அறிக்கையிடும் அலுவல்கள் தொடர்ச்சியாக நடாத்திச் செல்ல முடியாமல் இருந்தது என. | GPS முறைமையை செயற்படு நிலையில் பேணிச் செல்ல வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டு இறுதி அளவிலும் மாத்தறை பஸ் தரிப்பிடத்தில் மற்றும் அதிவேக பஸ் தரிப்பிடத்திலும் சபையின் அங்கீகாரம் இன்றி நடாத்தப்பட்டு வரும் 07 வர்த்தக நிலையங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த அங்கீகாரமின்றிய நிர்மாண வேலைகள் தொடர்பாக சட்ட உத்தியோகத்தரின் அறிவுரையின் படி உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவம்<br>------------------------------------------------------------<br>சபையின் அதிகாரப் பிரசேத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படும் குப்பை முகாமைத்துவத்திற்காக உக்கக் கூடிய குப்பைகளை பயன்படுத்தி சேதனப் பசளை உற்பத்தி செய்தல் முறைப் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், குப்பைகளை பயன்படுத்தி உயிர்வாயு உற்பத்தியின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்தல் மற்றும் உக்காத குப்பைகள் மற்றும் இலத்திரனியல் கழிவுப் பொருட்களை முறைப் பிரகாரம் அப்புறப்படுத்துவதற்காக செய்முறை ஒன்று அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. நாளாந்தம் சேகரிக்கப்படும் குப்பைகளை வகைப்படுத்தாமல் கொடவில குப்பை செயற்களத்திற்கு குவிக்கப்படுவதுடன் அந்த குப்பைகளை மண்ணினால் மூடுவதற்காக 2018 மே 18 திகதி முதல் மீளாய்வாண்டு இறுதி வரையான காலப் பகுதியில் எஸ்கவேடர் இயந்திரம் ஒன்று வாடகைக்கு எடுத்து 7537.30 மணித்தியாலங்கள் சேவையில் ஈடுபடுத்துவதற்காக ரூபா 36,568,262 இற்கான செலவொன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. | உக்கக் கூடிய மற்றும் உக்காத குப்பைகள் என வகைப்படுத்தி சேகரிக்கப்படுகின்றது எனவும் கொடவில திண்மக் கழிவுப் பொருள் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்படும் உக்கக்கூடிய குப்பைகள் காணப்படும் கொள்திறனின் படி சேதனப் பசளை உற்பத்தி செய்யப்படுகின்றது எனவும் பொலிதீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை மீள்சுழற்சி நிலையத்திற்கு அனுப்பப்படுகின்றது எனவும், மீதியான குப்பைகளை தெரிவு செய்யப்பட்ட விஷேட இடம் ஒன்றில் சமப்படுத்தி மண் போட்டு மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | முறையான குப்பை முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் ஒன்று செயற்படுத்த வேண்டும். |

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மாத்தறை மா நகர சபைக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலம் பஸ் தரிப்பு நிலையம், வர்த்தக தொடர் கட்டிடத்துக்காக மற்றும் இயந்திரப் பொறி உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக கடன் தொகையில் இருந்து 2019 ஆண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கடன் மற்றும் வட்டி ரூபா 55.06 மில்லியன் தொகை எனினும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதி பணிப்பாளர் நாயகத்தின் 07/03/12/Rev/matara இலக்கம் கொண்ட மற்றும் 2020 பெப்ரவரி 06 திகதிய கடிதத்தின் படி அந்த மீதி ரூபா 148.5 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், வித்தியாசத்துக்கான காரணங்களை கண்டறிந்து தீர்ப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த கடன் தொகை செலுத்துதல் தொடர்பாக தொடர் நடவடிக்கைக்காக கலந்துரையாடல் நடைபெறுகின்றது என. | வித்தியாசத்துக்கான காரணத்தை கண்டறிந்து தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நகர அபிவிருத்தி அதிகார சபை பணிப்பாளர் நாயகத்தின் 07/03/Rev/matara இலக்கங் கொண்ட மற்றும் 2001 மே 14 திகதிய கடிதத்தின் பிரகாரம் வர்த்தக தொடர்கட்டிடத்திற்காக செலவிடப்பட்டிருந்த தொகையில் 35 சதவீதம் அதாவது ரூபா 37,871,539 இற்கான தொகை கடையறை டென்டர் பண்ணுவதன் மூலமாக பெற்றுக் கொண்ட ஒரே தடவையில் பெறும் (Key Money) தொகையை பயன்படுத்தி ஒரே தடவையில் செலுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 20 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும் இது தொடர்பாக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டது என சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. வர்த்தக தொடர்கட்டிட கடையறைகளில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 42,314,532 இற்கான தொகையொன்று 02 வங்கிகளில் 07 சந்தர்ப்பங்களில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட பணம் தொடர்பாக கலந்துரையாடி அங்கு எடுக்கப்படும் தீர்மானத்தின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடிதத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | மாத்தறை மா நகர சபையின் நகர முதல்வருக்கு மற்றும் மந்திரிமாருக்கு மா நகர சபைக் கட்டளைச் சட்டம், தாபனக் கோவை, நிதிப் பிரமாணங்கள் மற்றும் ஏனைய சுற்றறிக்கைகள் தொடர்பாக புரிந்துணர்வு ஒன்று பெற்றுக் கொள்வதற்காக பொருத்தமான பதவியணி ஒன்று காணப்பட்ட போதிலும் அதற்கு மேலதிகமாக ஆலோசகர் ஒருவர் சேர்க்கப்பட்டு ஆலோசகர் படி என ரூபா 313,333 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | சபை தீர்மானத்தின் படி சேர்க்கப்பட்டிருந்ததுடன் தென் மாகாண ஆளுனரின் எதிர்வு ஒன்று காணப்படவில்லை. | காணப்படும் பதவியணியை பயன்படுத்தி கடமைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். |

**3.4 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்வேறு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த கொங்கிரீட் வடிகால்கள் தயாரிக்கும் 42 நிர்மாண வேலைகள் தொடர்பாக சட்டகங்கள் தயாரிப்பதற்காக பதப்படுத்தப்பட்ட பலகைகள் (Plywood) பயன்படுத்தப்பட்டு சட்டகங்கள் தயாரிப்பதற்காக கொடுப்பனவு மேற்கொள்ளும் போது சமமான வேலை விபரங்களுடனான விகிதம் என தென்மாகாண பொறியியல் சேவை அலுவலகத்தினால் ct-036 இன் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட ரூபா 841 இற்கான விகிதத்திற்கு பதிலாக, தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 01 அங்குலம் (55 | கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | பொருத்தமான மற்றும் அனுகூலமான விகிதங்களை பயன்படுத்த வேண்டும். |

மில்லிமீற்றர்) கனத்தில் கிழிக்கப்பட்ட இரண்டாம் வகுப்பை சேர்ந்த பலகைகளை பயன்படுத்தி சட்டகங்களை தயாரிப்பதற்காக ST-057 கீழ் அறிமுகப்படுத்தியிருந்த ரூபா 1,108 விகிதத்தையும் 25 மில்லிமீற்றர் கனத்தில் முதலாம் வகுப்பை சேர்ந்த கிழிக்கப்பட்ட பலகைகளில் மற்றும் 02 அங்குல (50x50 மில்லி மீற்றர்) பலகையை பயன்படுத்தி நாக்கு பொருத்துக்கள் (Tongue & Grooved) பயன்படுத்தி சிறந்த வேலைப்பாடு ஏற்படக் கூடியவாறு சட்டகங்களை தயாரிப்பதற்காக ST-112 இன் கீழ் அறிமுகப்படுத்தியிருந்த 1,377.85 விகிதத்தினை பயன்படுத்தி கொடுப்பனவு செய்திருந்தமையால் முறையே ஒரு சதுர மீற்றருக்காக ரூபா 267 மற்றும் 536.85 தொகை வீதம் சட்டகங்கள் 7232.56 சதுர மீற்றர்களுக்காக ரூபா 3,121,281 தொகை ஒன்று மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.